08.04.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண்.107/2018

அ.சா.18

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சீனிவாசன் | | |
| த/பெ | பெருமாள் | | |
| கிராமம் | கண்டம்பாக்கம் | தொழில் | செங்கல் சூலையில் கல் அறுக்கும் வேலை |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 60/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள இரண்டாம் கையெழுத்து என்னுடையதுதான். இந்த கையெழுத்தை எந்த தேதியில், எப்போது போட்டேன் என்றால் சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் போட்டேன். தேதி, மாதம் நினைவில்லை. நான் இந்த கையெழுத்தை எங்கு போட்டேன் என்றால் எங்கள் ஊர் பேருந்து நிறுத்தத்தில் போட்டேன். கையெழுத்து போடும்போது காவல்துறையினர் நான்கைந்து நபர்களை என் முன்பு விசாரணை செய்தார்களா? என்றால் விசாரணை செய்யவில்லை. அங்கு நான்கு பேர் இருந்தார்களா? என்றால் யாரும் இல்லை. போலீசார் என்னிடம் கையெழுத்து போடுங்கள் என்று சொன்னார்கள். நான் போட்டேன். கையெழுத்து போடும்போது அதில் எதையாவது எழுதி இருந்தார்களா? என்றால் எதுவும்

எழுதவில்லை. என்னிடம் கையெழுத்து போடு என்று சொன்னார்கள். போட்டேன். நான் எதற்காக கையெழுத்து போட வேண்டும் என்று கேட்டேனா, என்றால் கேட்கவில்லை. முருகன் என்பவர் இறந்து விட்டார். அவர் எனது தம்பி ஆவார். இந்த வழக்கு சம்பந்தமாக யாரையாவது விசாரித்து கையெழுத்து வாங்கினார்களா? என்றால் அது எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்தார்களா? என்றால் இல்லை. என் முன்னிலையில் வாகனம் எதையாவது கைப்பற்றினார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எதிரி சத்தியசீலன் அணிந்திருந்த உடைகளை என் முன்பாக கைப்பற்றினார்களா? என்று எனக்கு தெரியாது.

(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்ததன் பேரில், சாட்சி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்படுகிறார் )

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>

காவல்துறை விசாரணையில் கடந்த 03-10-2014ம் தேதி காலை 6.30 மணிக்கு தாலுக்கா காவல் ஆய்வாளர் இந்த வழக்கின் எதிரிகளான சத்தியசீலன், அன்பரசன், புகழேந்தி, பிரதாப் ஆகியோர்களை கைது செய்து விசாரித்த போது, அப்போது நானும் என்னுடன் ராமகிருஷ்ணன் என்பவரும் எங்கள் முன்பு காவல் துறையினர் எதிரிகளை விசாரணை செய்ய எதிரி பிரதாப் என்பவர் தாமாக முன்வந்து எந்த வித அச்சுறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி எங்கள் முன்னிலையில் ஒரு வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த வாக்கு மூலத்தில் தான் தன் அம்மா அப்பாவுடன் வசிப்பதாகவும் தங்களுக்கு சொந்தமான இரண்டு ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்து வருவதாகவும், சத்தியசீலன் தனது அண்ணன் என்றும், தான் 10ம் வகுப்பு முடித்து ஐ.டி.ஐ டிப்ளமோ ஆட்டோ மொபைல் படித்துள்ளதாகவும் தான் செல்லமாக வளர்ந்ததால் வேலைக்கு செல்லவில்லை என்றும், அதனால் தனக்கு குடி பழக்கம் ஏற்பட்டது என்றும், தனது

அண்ணன் மூலம் ஒன்றாம் எதிரியுடன் பழக்கம் ஏற்பட்டது என்றும், மேலும் கோபாலகிருஷ்ணன், ரகு, புகழேந்தி, அன்பரசு சிலம்பரசன், கருணாகரன், அசோக், ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் நண்பர்கள் ஆனார்கள். அனைவரும் ஒன்றாக சேர்ந்து குடிப்பது வழக்கம் என்றும், ஒன்றாம் எதிரிக்கு வயது அதிகம் என்பதால் அவரைத் தான் அண்ணன் என்று அழைப்பது வழக்கம் என்றும், கடந்த எட்டு வருடம் முன்பு வக்கீல் ஆறுமுகத்திற்கும், ஒன்றாம் எதிரிக்கும் ஏற்பட்ட பிரச்சனையில் வக்கீல் ஆறுமுகத்தை கொலை செய்துவிட்டு ஜெயிலுக்கு போய்விட்டு வந்தார் என்றும், அந்த வழக்கு விஷயமாக அடிக்கடி நீதிமன்றத்திற்கு போய்விட்டு வருவார் என்றும், அதனால் அவரைக் கண்டால் ஊரே பயப்படும் என்றும், அவருடன் நாங்கள் இருப்பதால் எங்களைக் கண்டால் ஊரில் உள்ளவர்கள் பயப்படுவார்கள் என்றும், ஒன்றாம் எதிரி அடிக்கடி எங்களுக்கு பிராந்தி வாங்கி கொடுப்பார் என்றும், ஒன்றாம் எதிரி குடித்துவிட்டு வந்து வக்கீல் ஆறுமுகத்தின் குடும்பத்தாரால் தனக்கு பிரச்சனை என்று அடிக்கடி புலம்புவார் என்றும், ஒன்றாம் எதிரியின் மீது உள்ள வழக்கு விசாரணைக்கு வர உள்ளதாகவும் வழக்கை முடிப்பதற்காக ஆறுமுகத்தின் தம்பி முருகனிடம் சமாதானம் பேசினார் என்றும், அதற்கு முருகன் ஒத்துழைக்கவில்லை என்றும், இந்த நிலையில் 28-08-2014ம் தேதி இரவு சுமார் பத்து மணியளவில் ஒன்றாம் எதிரி எங்கள் அனைவரையும் கூப்பிட்டார் என்றும், அப்போது நான் எனது அண்ணன் சத்தியசீலன் ஆகிய நாங்கள் இருவரும் ரேஷன் கடை முன்பு உட்கார்ந்திருந்தோம் என்றும், அங்கிருந்த ஒன்றாம் எதிரியை போய் பார்த்தோம் என்றும், அங்கு ஏற்கனவே கோபாலகிருஷ்ணன், ரகு, சிவா, அசோக், புகழேந்தி, என் அண்ணன் சத்தியசீலன், அன்பரசன், சிலம்பரசன், விநாயகமூர்த்தி, கருணாகரன், அசோக், ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், அப்போது ஒன்றாம் எதிரி பிராந்தி பாட்டிலை எடுத்து எங்கள் முன்பு வைத்தார் என்றும், அப்போது ஒன்றாம் எதிரி எங்களிடம் இனிமேல் உங்களுடன் உட்கார்ந்து சரக்கு சாப்பிட முடியாது நான் பிரியப்

போகிறேன் என்று அழுதார் என்றும், அப்போது ரகு என்பவர் ஏன் குடித்துவிட்டு ஊளறுகிறாய் அழுகையை நிறுத்து என்று சொன்னபோது, விநாயகமூர்த்தி உன்னை என்னிடம் இருந்து யாராலும் பிரிக்க முடியாது என்றும் அவர்களை நாங்கள் சும்மா விட மாட்டோம் என்றும் ஆவேசமாக சொன்னார்கள் என்றும், அப்போது ஒன்றாம் எதிரி வக்கீல் கொலை பண்ண கேசுக்கு விசாரணைக்கு வந்துடுச்சு முருகன் சாட்சி சொல்ல இன்னைக்கு சம்மன் கொடுத்துட்டாங்க வழக்கு 08-09-2014 ஆம் தேதி விசாரணைக்கு வருது அப்போது முருகன் சாட்சி சொல்லிட்டா எனக்கு தண்டனை கொடுத்து விடுவார்கள் உங்களைவிட்டு பிரிவதற்கு பதிலாக என்னை நீங்களே கொன்று விடுங்கள் என்று சொல்லி அழுதார் என்றும், அதற்கு மற்ற எதிரிகள் உன்னை அழ விட மாட்டோம் அப்படி நடக்காமல் இருக்க அவனை போட்டுத் தள்ளி விட்டால் எந்த பிரச்சினையும் இருக்காது என்று மற்ற எதிரிகள் திட்டம் தீட்டி ஒன்றாம் எதிரியிடம் சொன்னார்கள் என்றும், முருகன் உயிருடன் இருந்தால் நிம்மதியாக இருக்க முடியாது அவனை கொலை செய்து விட்டால் எந்த பிரச்சினையும் இருக்காது என்று சொன்னார்கள் என்றும், உடனே ஒன்றாம் எதிரி கொலை பண்ணாலும் நீ என் கூட தானே இருக்கிற உன் மேல் பழி விழும் என்று சொல்லி பயமுறுத்தினார்கள் என்றும், அப்போது அன்பரசன் என்பவர் சமாதானப்படுத்தினார் என்றும், புகழேந்தி முருகனை என்றைக்கு போடலாம் என்று கேட்டார் என்றும், அதற்கு ஒன்றாம் எதிரி எதற்கு நாள் கிழமை பார்க்கணும் இன்றைக்கு முருகன் கதையை முடித்துக் கொள்ளலாம் என்றும், இப்போது முருகன் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறான் என்று பார்த்து வர சொல்லி அனுப்பி வைத்தார் என்றும், அப்போது இரவு 11:30 மணி இருக்கும் என்றும், அந்த நேரத்தில் ஊரில் விநாயகர் கோயில் திருவிழா நடைபெற்றது என்றும் சின்ன பசங்க போஸ்டர் ஒட்டிக் கொண்டிருந்தபோது முருகன் வீட்டு பக்கம் போஸ்டர் ஒட்டுகிற மாதிரி ரகு போய் அரை மணி நேரம் கழித்து திரும்ப வந்து முருகன் திண்ணையில் நன்றாக தூங்கிக்

கொண்டிருக்கிறான் என்றும் ஆனால் ஜன நடமாட்டம் இருக்கிறது என்று சொன்னார் என்றும், அப்போது எதிரி கருணாகரன் கரண்டை நிறுத்திவிட்டால் எல்லோரும் போய்விடுவார்கள் அதன் பிறகு முருகன் கதையை முடித்து விடலாம் என்று சொன்னார் என்றும், ஒன்றாம் எதிரி சிவாவை பார்த்து பீஸ் கேரியரை பிடுங்க சொன்னார் என்றும் கரண்ட் நின்னதுக்கு அப்புறம் அரை மணி நேரம் கழித்து முருகன் வீட்டிற்கு போகலாம் என்று சொன்னார் என்றும், அப்போது சிலம்பரசன் தனது வீட்டில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து வர சொன்னார் என்றும், உடனே சிலம்பு கத்தியை எடுத்து வந்தார் என்றும், சிவா கரண்டை நிறுத்திய உடன் 10 நிமிடம் கழித்து இரண்டு கத்தியை எடுத்து வந்தார் என்றும், ஒன்றாம் எதிரி ரகுவை பார்த்து சிலம்பு விடம் இருக்கும் கத்தியை ஒன்றை வாங்கிக் கொண்டு சிலம்புவிடம் ஒரு கத்தியை வாங்கி தான் வைத்துக் கொள்வதாகவும், நீயும் நானும் முருகனை வெட்டி விடலாம் என்று கழுத்தில் வெட்டினால் உயிர் போய்விடும் என்றும், அதனால் அன்பரசன் தலையை கட்டியாக பிடித்துக் கொண்டு என் அண்ணன் சத்தியசீலன் ஒரு காலையும் புகழேந்தி ஒரு காலையும் அழுத்திப் பிடிக்கச் சொன்னான் என்றும், கோபாலை இரண்டு கைகளை அழுத்திப் பிடிக்க சொன்னார் என்றும், ஒன்றாம் எதிரி வீரப்பன் வீட்டு பக்கம் நின்று கொண்டு ஆள் வருகிறார்களா என்று பார்க்கச் சொன்னார் என்று விநாயகமூர்த்தி பிள்ளையார் கோயில் அருகிலும் அசோக் மரகதபுரம் ஊர் பக்கமாக திரும்பி நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார் என்றும், மற்றவர்கள் முருகனைக் கொல்லும் போது யாராவது தடுக்க வந்தால் எல்லோரையும் சுற்றி பாதுகாப்பாக நிற்க சொன்னார் என்றும், முருகனை கொலை செய்ய திட்டம் செய்து அங்கிருந்து கிளம்பி முருகன் வீட்டிற்கு சென்றார்கள் என்றும், அப்போது முருகன் தன் வீட்டில் ஒருக்களித்து ஒரு கையை மடக்கி முகத்தில் சுவற்றின் பக்கமாக வைத்து இரு கால்களையும் ஒன்றாக சேர்த்துக் கொண்டு படுத்துக்கொண்டிருந்தார் என்றும், அப்போது எதிரி அன்பரசன் முருகனின்

தலையை திருப்ப முடியாதபடி அழுத்தி பிடித்துக் கொண்டார் என்றும், முருகன் ஒருக்களித்து படித்திருந்ததால் முருகனின் இடுப்பு மீது உட்கார்ந்து கோபால் என்பவர் திமிராதபடி முருகனின் இடுப்பு மீது உட்கார்ந்து கைகளையும் உடலையும் அசைக்க முடியாத படி கெட்டியாக பிடித்துக் கொண்டார் என்றும், என் அண்ணன் சத்தியசீலன் இரண்டு கால்களின் முட்டியையும் சேர்த்து பிடித்துக் கொண்டார் என்றும், புகழேந்தி இரண்டு கணுக்காலையும் பிடித்துக் கொண்டார் என்றும் அப்போது ஒன்றாம் எதிரி முருகனின் கழுத்தில் ஓங்கி வெட்டினார் என்றும், அடுத்து எதிரி ரகு அவரும் கழுத்தை வெட்டினார் என்றும், இருவரும் மாறி மாறி வெட்டினார்கள் என்றும், சிலம்பரசன், கருணாகரன், சிவா ஆகியோர் சுற்றி நின்று கொண்டு வெட்டுங்கடா வெட்டுங்கடா என்று ஆவேசமாக கத்தினார் என்றும், முருகன் இறந்து விட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு எதிரிகள் அங்கிருந்து தப்பிச் சென்றார்கள் என்றும் அப்போது முருகனின் மனைவி வெளியே வருவதை பார்த்து தப்பி ஓடி விட்டார்கள் என்றும், எதிரிகள் உடைகளை மாற்றிக் கொண்டு சம்பவத்தில் பயன்படுத்திய உடைகளை வீட்டின் பீரோவின் கீழ் பதுக்கி வைத்து விட்டு தனக்கு சொந்தமான tn 04 2029 யமஹா பைக்கில் சிலம்பரசன், கருணாகரனுடன் எனது அண்ணன் சத்தியசீலன், ரகு ஆகியோர்கள் அன்பரசன் வைத்திருந்த பைக்கிலும், ஒன்றாம் எதிரி பைக்கில் விநாயகமூர்த்தி, மற்றொரு ராதாகிருஷ்ணன், புகழேந்தி பைக்கில் தப்பி ஓடி விட்டதாகவும், முருகன் கொலை செய்யப்பட்டது தொடர்பாக அவரின் மனைவி புகார் கொடுக்கவில்லை என்பதை அறிந்த நாங்கள் நிம்மதியாக ஊருக்கு வந்து அமைதியாக இருந்த போது போலீசார் பிடித்து எங்களை விசாரணை செய்ய நடந்த சம்பவத்தை தெரிவித்தோம் என்றும் அணிந்திருந்த ஆடைகளை இருசக்கர வாகனத்தையும் போலீசாரிடம் ஆஜர் செய்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் மேற்படி தேதியில்

காலை 9.30 மணியளவில் எதிரி புகழேந்தியிடமிருந்து போலீசார் எங்கள் முன்னிலையில் எதிரியிடமிருந்து டிஎன் 32 இ 5559 என்ற எண்ணுள்ள அப்பாச்சி இருசக்கர வாகனத்தை கைப்பற்றினார்கள் என்றும், போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றும் போது தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நான் இரண்டாவது சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும், அதன் பிறகு மதியம் 1:30 மணி அளவில் எதிரி பிரதாப்பிடமிருந்து டிஎன் 04 2029 என்ற எண்ணுள்ள யமஹா ஆர் எக்ஸ் 3 என்ற இருசக்கர வாகனத்தை போலீசார் எங்கள் முன்னிலையில் எதிரியிடமிருந்து கைப்பற்றி அப்போது தயார் செய்த கைப்பற்றுதல் மகசரிலும் நான் இரண்டாவதாக சாட்சி கையெழுத்து செய்தேன் என்றும், மேற்படி தேதியில் பகல் 3.05 மணியளவில் எதிரி சத்தியசீலனிடம் இருந்து சம்பவ நேரத்தில் தான் உடுத்தி இருந்த வெள்ளை கருப்பு கோடு போட்ட முழுக்கை சட்டை ஒன்றையும், காபி கலர் பூ போட்ட லுங்கி ஒன்றையும் போலீசார் எதிரியிடமிருந்து எங்கள் முன்னிலையில் கைப்பற்றிய போது அப்போது தயார் செய்த கைப்பற்றுதல் மகசரிலும் நான் இரண்டாவது சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், அதே தேதியில் 3:25 மணி அளவில் எதிரி அன்பரசை அவர் சம்பவ நேரத்தில் அணிந்திருந்த நீலம் வெள்ளை கட்டம் போட்ட முழுக்கை சட்டை, கரு நீல கலர் ஜீன்ஸ் பேண்ட் ஒன்று எடுத்து ஆஜர் செய்ததை போலீசார் எங்கள் முன்னிலையில் கைப்பற்றி அப்போது தயார் செய்த கைப்பற்றுதல் மகசரிலும் நான் இரண்டாவது சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், மேற்படி தேதியில் மதியம் 3:45 மணி அளவில் எதிரி புகழேந்தி அணிந்திருந்த ரோஸ் கலர் கழுத்து போட்ட நெக் டி ஷர்ட் ஒன்றும், கருப்பு கலர் லோயர் ஒன்றும் எடுத்து எங்கள் முன்னிலையில் போலீசாரிடம் ஆஜர் செய்ததை போலீசார் கைப்பற்றி எங்கள் முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மகசரில் நான் இரண்டாவது சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், அதே தேதியில் மாலை 4.05 மணிக்கு எதிரி பிரதாப் தான் போட்டிருந்த சிமெண்ட் கலர் வெள்ளை பூ போட்ட முழுக்கை சட்டை ஒன்றையும்,

காபி கலர் பேண்ட் ஒன்றையும் போலீசார் எங்கள் முன்னிலையில் எதிரியிடமிருந்து கைப்பற்றி எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரிலும் நான் இரண்டாவது சாட்சியாக கையெழுத்து செய்தேன் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால், உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

இல்லை